

2010 ஆம் ஆண்டு அன்றைய தமிழ்நாடு முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வழிகாட்டுதலின்படி 800 மெகாவாட் திறன் கொண்ட வட சென்னை அனல் மின் திட்டம்–III நிறுவுவதற்காக அரசாணை வெளியிடப்பட்டும், கடந்த பத்து ஆண்டு காலமாக பணிகள் மந்தமாக நடைபெற்று வந்த நிலையில், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான அரசு பொறுப்பேற்றவுடன் பணிகள் விரைவுபடுத்தப்பட்டு, தற்போது முடிக்கப்பட்டு நேற்று முன்தினம் (7.3.2024) தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 10,158 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக நிறுவப்பட்டுள்ள 800 மெகாவாட் வட சென்னை மிக உய்ய அனல் மின் நிலையம்–III திறந்து வைத்து, மின்சார உற்பத்தியினை தொடங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னாக, கைத்தறி, துணிநூல் மற்றும் கதர்த் துறை அமைச்சர் ஆர். காந்தி, நாடாளுமன்ற உறுப்பினர் கே. ஜெயக்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் டி.ஜெ.கோவிந்தராஜன், துரை சந்திரசேகர், தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழகத்தின் தலைவர்/ தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் ராஜேஷ் லக்கானி, எரிசக்தித் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பீலா வெங்கடேசன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## தலைவர் கலைஞர் ஆட்சியில் அரசாணை வெளியிடப்பட்ட திட்டம்! அத்திப்பட்டில்

# ரூ.10,158 கோடியில் வடசென்னை மிக உய்ய அனல் மின் நிலையம்-III

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்து மின் உற்பத்தியை தொடங்கி வைத்தார்!

**சென்னை, மார்ச் 9–**

**தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (7.3.2024) திருவள்ளூர் மாவட்டம், அத்திப்பட்டு கிராமத்தில், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் சார்பில் 10,158 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக நிறுவப்பட்டுள்ள 800 மெகாவாட் வட சென்னை மிக உய்ய அனல் மின் நிலையம்–III திறந்து வைத்து, மின்சார உற்பத்தியினை தொடங்கி வைத்தார்.**

**தலைவர் கலைஞர் ஆட்சியில் அரசாணை வெளியிடப்பட்டது!**

26.10.2010 அன்று அன்றைய தமிழ்நாடு முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, தமிழ்நாடு மின்சார வாரியம் மூலமாக திருவள்ளுவர் மாவட்டம், அத்திப்பட்டு பகுதியில் சுமார் 190 ஏக்கர் நிலப்பரப்பில் 800 மெகாவாட் திறன் கொண்ட வட சென்னை அனல் மின் திட்டம்-III நிறுவுவதற்கான அரசாணை வெளியிடப்பட்டது.

கடந்த பத்து ஆண்டுகளாக மந்தமாக நடைபெற்று வந்த மின் திட்டப் பணிகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்ற பின்னர், மின் திட்டங்கள் அனைத்தும் முடிக்கி விடப்பட்டு உடனடியாக இயக்கத்திற்கு கொண்டு வர தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

இதன் பயனாக, திருவள்ளூர் மாவட்டம், அத்திப்பட்டு பகுதியில், சுமார் 190 ஏக்கர் நிலப்பரளவில், 10,158 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் சார்பில் நிறுவப்பட்டுள்ள 800 மெகாவாட் திறன் கொண்ட வட சென்னை அனல் மின் திட்டம்-III பணிகள் முடிக்கப்பட்டு, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் நேற்று முன்தினம் மின் உற்பத்தி தொடங்கி வைக்கப்பட்டு, பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (7.3.2024) திருவள்ளூர் மாவட்டம், அத்திப்பட்டு கிராமத்தில், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் சார்பில் 10,158 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 800 மெகாவாட் வட சென்னை மிக உய்ய அனல் மின் நிலையம்–III–யும், அந்நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு அறையையும் திறந்து வைத்து, செயல்பாட்டினை பார்வையிட்டார். இந்த நிகழ்ச்சியில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, கைத்தறி, துணிநூல் மற்றும் சுதர்த் துறை அமைச்சர் ஆர். காந்தி, நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஜெயக்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் டி.ஜெ. கோவிந்தராஜன், துரை சந்திரசேகர், தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழகத்தின் தலைவர்/ தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் ராஜேஷ் லக்கானி, எரிசக்தித் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பீலா வெங்கடேசன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வட சென்னை மிக உய்ய அனல் மின் நிலையம்-III சிறப்பு அம்சங்கள்**

அதி உய்ய நிலை வெப்ப தொழில்நுட்பம் பயன்படுத்தி நிறுவப்படும் தமிழ்நாட்டின் முதல் அனல் மின் திட்டமாகும்.பிற அனல் மின் திட்டங்களை ஒப்பிடும் போது, இது 5 முதல் 6 சதவீதம் வரை அதிக திறன்மிக்கது.எனவே, இதன்மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்திற்கு எரிபொருள் செலவு குறைவதுடன், மின் உற்பத்தியினை தொடங்குவதற்கு குறைவான நேரமே தேவைப்படும்.

இத்திட்டத்தின் மூலம் ஒரு யூனிட் மின்சாரம் உற்பத்தி செய்ய நிலக்கரி நுகர்வு 0.45 கிலோ கிராம் அளவு மட்டுமே தேவைப்படுவதால், கார்பன் டை ஆக்சைடு உமிழ்வு 25 முதல் 30 சதவீதம் வரை குறைகிறது.எனவே, இத்திட்டமானது, சுற்றுச்சூழல் நட்புணர்வுத்தன்மை கொண்டுள்ளது.

இந்த நிலையத்தில் உற்பத்தி செய்யும் மின்சாரத்தை 765 கி.வோ.மின் தொடரமைப்பு மூலமாக மின் கட்டமைப்புடன் இணைக்கப்பட்டு பகிர்மானம் செய்யப்படும்.

இத்திட்டத்தின் மூலம், மாநிலத்தின் மின் உற்பத்தித் திறன் மேலும் அதிகரித்து, மாநிலத்தின் மின்சாரத் தேவையினை பூர்த்தி செய்ய உறுதுணை புரிவதுடன், வெளிசந்தையில் மின் கொள்முதல் செய்வது குறைக்கப்படும். இதனால், மின்சார வாரியத்தின் நிதி நிலை மேம்படுவதுடன் நம் மாநிலத்தின் சமூக பொருளாதார வளர்ச்சிக்கும் இத்திட்டம் முக்கிய பங்களிக்கும்.

இந்த நிகழ்ச்சியில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, கைத்தறி, துணிநூல் மற்றும் கதர்த் துறை அமைச்சர் ஆர்.காந்தி, நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஜெயக்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் டி.ஜெ.கோவிந்தராஜன், துரை சந்திரசேகர், தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழகத்தின் தலைவர்/ தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் ராஜேஷ் லக்கானி, எரிசக்தித் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பீலா வெங்கடேசன், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் மற்றும் தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழகத்தின் இணை மேலாண்மை இயக்குநர் (நிதி ( விஷூ மஹாஜன், திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் த.பிரபுசங்கர், மின் தொடரமைப்புக் கழக மேலாண்மை இயக்குநர் மா.இராமச்சந்திரன், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் இயக்குநர் (திட்டம்) திருமதி நா.உமாதேவி, இயக்குநர் (பகிர்மானம்) இரா.மணிவண்ணன், இயக்குநர் (உற்பத்தி) த.ராஜேந்திரன், இயக்குநர் (இயக்கம்) செல்வசேகர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---



விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஒன்றியம் சிட்டாம்பூண்டிஊராட்சியில் 13.71 கோடி ரூபாய் மதிப்பீட்டில்புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரி கட்டிடம் கட்டுவதற்கு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு தமிழர்கள் நலத்துறை அமைச்சர்செஞ்சி மஸ்தான் அடிக்கல் நாட்டி பணியை தொடங்கி வைத்தார்.உடன் விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் டாக்டர் பழனி, திண்டிவனம் சார் ஆட்சியர் திவ்யான்ஷுநிகம்,செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான் உள்ளனர்.

## செஞ்சி மக்களின் 40 ஆண்டு கால கோரிக்கை நிறைவேற்றம்

# ரூ.13.71 கோடி மதிப்பில் கலை அறிவியல் கல்லூரி!

## அமைச்சர் செஞ்சி மஸ்தான் அடிக்கல் நாட்டினார்!

*செஞ்சி, மார்ச் 9-*

*செஞ்சிதொகுதி மக்களின் 40 ஆண்டுகால கல்லூரி கல்வி கனவை முதலமைச்சர் நிறைவேற்றியுள்ளார்.*

*தலைமுறை தலைமுறையாய் படிப்பதற்கு உதவும் வகையில் அரசு கல்லூரி அமைய உள்ளது என 13.71கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி கட்டிடம் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டுகையில் அமைச்சர் செஞ்சி மஸ்தான் பெருமிதம் தெரிவித்தார்.*

*முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களிடம் செஞ்சிப் பகுதியில் அரசு கலைக் கல்லூரி அமைக்க வேண்டும் என சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கோரிக்கை வைத்திருந்தார்.*

*இக்கோரிக்கையை ஏற்று கடந்த 2022ல்நடைபெற்ற சட்டமன்ற கூட்டதொடரில் விழுப்புரம் மாவட்டம் செஞ்சியில் அரசு கலைக்கல்லூரி அமைக்கப்படும்என அறிவிக்கப்பட்டது .*

*அந்தவகையில் செஞ்சியில் 2022-2023ஆம்ஆண்டுக்கான அரசு கலைக்கல்லூரியில் மாணவர் சேர்க்கையை தமிழ்நாடு அரசு அறிவித்ததையடுத்து சென்னை தலைமைச் செயலகத்தில் இருந்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் காணொலி காட்சி வாயிலாக செஞ்சியில் புதியஅரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை திறந்து வைத்தார்.*

*இதையடுத்துதற்காலிகமாக செஞ்சி ராஜா தேசிங்கு அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் அரசுகலை மற்றும் அறிவியல் கல்லூரிசெயல்பட்டு வருகிறது.*

*இந்நிலையில் செஞ்சி தாலுக்காசெஞ்சி விழுப்புரம் சாலையில் சிட்டாம்பூண்டி ஊராட்சியில் செஞ்சி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி கட்டிடம் கட்டுவதற்கு இடம் தேர்வு செய்யப்பட்டு புதிய கல்லூரி கட்டிடம் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது.*

*நிகழ்ச்சிக்கு விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் டாக்டர் பழனி தலைமை தாங்கினார். செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார்,செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான், ஒன்றிய கவுன்சிலர் பனிமலர் ராஜாராம் ஊராட்சி மன்ற தலைவர் பச்சையப்பன், ஆகியோர் முன்னிலை வகித்தனர். செஞ்சி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர் டாக்டர் லலிதா அனைவரையும் வரவேற்றார்.*

*நிகழ்ச்சியில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத் துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு 13.71 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி கட்டிடம் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டி பணிகளை தொடங்கி வைத்தார்.*

*நிகழ்ச்சியில் வட்டாட்சியர் ஏழுமலை,வல்லம் அமுத ரவிக்குமார், மயிலம் யோகேஸ்வரி மணிமாறன்,விழுப்புரம் வெங்கடேச பாபு,மதுரை வீரன், ஶ்ரீதர், ஜெயபாலன்,சீத்தாலட்சுமி, முல்லை, நெடுஞ்செழியன், விஜயராகவன், துரை, இளம்வழுதி,சாந்தி சுப்பிரமணியன்,அரங்க ஏழுமலை, அஞ்சாஞ்சேரி கணேசன் மற்றும் பலர் பங்கேற்றனர்.*

**பெருநகர சென்னை மாநகராட்சி**
**மின்துறை**
கலைஞர் 100 1924 - 2023

மி.து.ந.க.எண்.சி.பி.மே2 / பி1 / 1349 / 2023

**குறுகிய கால மின் ஒப்ப அறிவிப்பு**

மின்துறையில் குறுகிய கால மின் ஒப்பம் கண்காணிப்பு பொறியாளர் / மின்துறை அவர்களால் வரவேற்கப்படுகிறது.

**பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் – 5, வார்டு 58ல் ரிப்பன் கட்டிடத்தில் உள்ள மாமன்ற கூடத்தில் இருக்கும் Analog ஒலிபெருக்கி அமைப்பை (Public Addressing System) மேம்படுத்துவதற்கான சிஸ்டம் சர்வர் மென்பொருள் உள்ளிட்ட டிஜிட்டல் இன்டர்ஃபேஸ் யூனிட்கள், ஆடியோ பவர் ஸ்விட்சிங் சாதனங்கள், கேபிள் மற்றும் துணைக்கருவிகளுடன் புதிய ஐபி அடிப்படையிலான மாடுலர் டிஜிட்டல் ஃப்ளஷ் மவுண்ட் கான்ஃபரன்ஸ் சேர்மன் மற்றும் டெலிகேட் யூனிட்களை வழங்கி, நிறுவி, சோதித்து மற்றும் இயக்கி வைக்கும் பணி.**

**பணியின் மதிப்பு : ரூ.3,37,25,739.70 முன் வைப்புத் தொகை ரூ.3,37,260/-**

ஒப்பந்ததாரர்கள் **https://tntenders.gov.in** இணையதளத்தின் மூலம் விவரங்களை தெரிந்து கொண்டு மின் ஒப்பத்தில் **14.03.2024 முற்பகல் 11.15** மணிக்குள் பங்கேற்கலாம், **14.03.2024 பிற்பகல் 3.15 மணிக்கு** ஒப்பங்கள் திறக்கப்படும்.

செ.ம.தொ.இ / 1468 / ஒப்பந்தப்புள்ளி / 2024

**கண்காணிப்பு பொறியாளர் / மின்துறை**